முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 39/2021

தேதி : 28-03-2024

(வா.சா.1) – நித்யா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை :

பாகப்பிரிவினைக்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எங்களது உறவுமுறையை காட்டக்கூடிய வம்சாவழி பட்டியலை தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து மாரிமுத்து செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவருக்கு மூன்று மக்கள் என்றால் சரியல்ல, ஐந்து மக்கள். அவர்களில் மூத்தவர் என் தகப்பனார் சுப்பிரமணியன் செட்டியார். கந்தசாமி செட்டியார் என் சித்தப்பா. சுப்பம்மாள் என் அத்தை. அந்த சுப்பம்மாளின் மகள் ராஜேஸ்வரியை தான் 1-ம் பிரதிவாதி திருமணம் செய்துள்ளார். 1-ம் பிரதிவாதியின் மகன் தான் 2-ம் பிரதிவாதி. என் அப்பா எழுதிவைத்த உயிலின் அடிப்படையில் சொத்தில் பாகம் கேட்கிறேன். என் அப்பாவிற்கு அந்த சொத்து என் தாத்தா எழுதிவைத்த உயில் மூலம் பாத்தியம். வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 15.09.1982 தேதிய உயில் ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. என் அப்பாவிற்கு எந்த சொத்து உயில் எழுதிவைக்கப்பட்டுள்ளதோ அந்த சொத்து தான் எங்களுக்கு கிடைக்கும். மேற்படி 15.09.1982 தேதிய உயிலை ஏன் தாக்கல் செய்யவில்லை என்று கேட்டால் சாட்சி அதற்கு புரியவில்லை என்று பதில் கூறுகிறார். என் அப்பாவிற்கு என் தாத்தா

எழுதிவைத்த உயிலை நான் படித்துப்பார்த்துள்ளேன். என் தாத்தா எழுதிவைத்த உயிலில் புல எண். 269/1B–ல் ஏக்கர் 8 செண்ட் 98–ல் தென்கிழக்குப் பக்கம் ஏக்கர் 2 செண்ட் 98 என்று மட்டும் தான் சொத்தை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த 2 ஏக்கர் 98 செண்ட் சொத்தை பொறுத்து மட்டும் தான் என் தகப்பனாரால் உயில் எழுதிவைக்க முடியும் என்றால் சரிதான். என் தகப்பனார் எழுதிவைத்த உயிலில் A தபசில் சொத்தாக 1–ம் பிரதிவாதிக்கும், வாதிகளுக்கும் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். என் தாத்தா உயிருடன் இருக்கும்போதே 27.08.1982 தேதிய உயில் எழுதிவைத்து அதில் என் சித்தப்பா கந்தசாமி செட்டியாருக்கு ஆயுள் பாத்தியமும், அவருக்கு பின்னால் அவரது மகன் முத்துக்குமாருக்கு சர்வ சுதந்திர பாத்தியமும் கொடுத்து சொத்துக்களும், 2–ம் பிரதிவாதியின் தாயாருக்கு ஆயுள் பாத்தியமும் அவருக்கு பின்னால் 2–ம் பிரதிவாதிக்கு சர்வ சுதந்திர பாத்தியமும் கொடுத்து சொத்துக்களும் எழுதி பாத்தியப்படுத்தி வைத்துள்ளார் என்றால் சரிதான். 27.08.1982 தேதியில் என் தாத்தா எழுதிவைத்த உயிலை அவர் ரத்து செய்யவில்லை. 15.09.1982 தேதியில் என் அப்பாவிற்கு என் தாத்தா மாரிமுத்து செட்டியார் எழுதிவைத்த உயிலை ரத்து செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா எழுதிவைத்த உயிலின் அசல் என் கைவசம் தான் உள்ளது. பிராது தயார் செய்வதற்கு வழக்கறிஞருக்கு நான் தான் தகவல் கொடுத்தேன். அதில் அசல் உயில் என் சகோதரர் செல்வராஜிடம் உள்ளதாக சொல்லியுள்ளேன். அவரிடமிருந்து நான் வங்கி வைத்துக்கொண்டேன். செல்வராஜ் மற்றும் நான் எல்லோரும் ஒன்றாக தான் இருக்கிறோம். வழக்கு சொத்தான புல எண். 269/1B–ல் 1 ஏக்கர் 50 செண்ட் சொத்தை என் தாத்தா 2–ம் பிரதிவாதி பெயரில் உயில் எழுதிவைத்து 2–ம் பிரதிவாதி பெயருக்கு புல எண். 269/1B2

என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. புல எண். 269/1B–ல் மொத்தம் 8 ஏக்கர் 98 செண்ட் என் தாத்தா மாரிமுத்து செட்டியாருக்கு பாத்தியப்பட்டது. என் தாத்தா உயிருடன் இருக்கும்போதே அதில் 4 ஏக்கர் 50 செண்ட் சொத்தை என் சித்தப்பா கந்தசாமி செட்டியாருக்கும், 1 ஏக்கர் 50 செண்ட் சொத்தை 2–ம் பிரதிவாதிக்கும் உயில் எழுதிவைத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் என் சித்தப்பாவை பிரதிவாதியாக சேர்க்கவில்லை. என் அப்பாவிற்கு உயில்படி 2 ஏக்கர் 28 செண்ட் மட்டும் தான் பாத்தியம் என்றும், அதை மட்டும் தான் நாங்கள் பிரித்துக்கொள்ள முடியும் என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பாவிற்கு 4 ஏக்கர் 22 செண்ட்பாத்தியம் என்று காண்பிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. என் தாத்தா எழுதி கொடுத்ததே 2 ஏக்கர் 28 செண்ட் மட்டும் தான் என்றும், அதனால் தான் முன் பத்திரங்கள் எதையும் தாக்கல் செய்யாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எந்தவித முகாந்திரமும் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் 5, 6 பேர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. அவர்களை சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது. அந்த உயிலை நாங்கள் நிரூபிக்கவில்லை என்றும், எனவே சட்டப்படி எந்த பாகமும் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.03.28 13:12:57 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.